## ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை
## புத்தளம் மாவட்டம்

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) கடந்த வருடத்திற்கு உரித்தான ரூபா. 2,000,000 பெறுமதியான ஊழியர் சம்பளம் மீள் நிரப்பல் திரண்ட நிதிக்குக் வரவு வைக்கப்படாமல் மீளாய்வாண்டில் வருமான உதவியாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் நிரந்தர ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய ரூபா. 711,742 சம்பளம் மீள் நிரப்பல் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான காணி மற்றும் சொத்துக்களை வெளி நபர்களுக்கு வழங்குவதன் மூலம் மீளாய்வாண்டில் பெறப்பட்ட மூலதன வருமானமாகிய ரூபா. 2,380,000 மீண்டெழும் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) தேசத்திற்கு மகுடம் வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 450,000 பெறுமதியான விஜய கட்டுபொல வாராந்த சந்தை சபையின் ஒரு சொத்தாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கடன் கோவைகள் மற்றும் முற்பணக் கொடுப்பனவு விபரங்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக முறையே ரூபா 275,585 மற்றும் ரூபா 280,000 ஆன ஊழியர் கடன் மற்றும் முற்பணக் கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| (i) 5(3) விதி | 37,191,866 | வருமானம் சேகரிப்பு தொடர்பாக உள்ளக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 5(6) | 76,992,518 | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய சகல வருமானங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் என்பவற்றை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி 5(7) | | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) விதி 218 | | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1645 | | பயன்படுத்தப்பட்ட சகல வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் ‘ இயந்திர மணித்தியாலங்கள் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி செயலாற்றல்

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,054,473 ஆக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,040,231 ஆக காணப்பட்டது.

## 2.2 வருமான நிர்வாகம்

---------------------------------

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **2017** | | | | **2016** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| ------------ | -------------- | ----------------- | -------------------- | -------------- | -------------- | -------------- | -------------- | -------------- |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 3,562 | 6,365 | 4,293 | 10,744 | 2,749 | 2,965 | 4,198 | 8,672 |
| வாடகை | 5,133 | 8,327 | 8,587 | 4,738 | 2,759 | 6,765 | 8,329 | 4,998 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,170 | 1,554 | 1,554 | - | 400 | 854 | 854 | - |
| ஏனைய வருமானம் | 48,367 | 47,575 | 53,100 | 35,460 | 42,127 | 47,537 | 12,043 | 40,994 |

குறிப்பு * Nrfupf;fg;gl;l வருமானத்தில் ஆண்டின் பட்டியலிடப்பட்ட வருமானத்தின் அறவீடுகள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானத்தின் அறவீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

---------------------------------

2017 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 53,100,000 மொத்த நிலுவை வருமானத்தில் மீளாய்வாண்டில் ரூபா 13,847,875 அதாவது 34 சதவீதம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 84 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 6,124,514 ஆன பட்டியலிடப்பட்ட வீதவரிகளிலிருந்து ரூபா 2,080,712 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அது பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 34 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 7,772,484 ஆன நிலுவை வீதவரிகளிலிருந்து ரூபா 1,854,662 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அது 24 சதவீதமாக இருந்தது.

**2.2.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,359,714 ஆன நிலுவை வாடகையில் ரூபா 1,975,201 தொகை 2002 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக இருந்தது.

(ஆ) ஆரச்சிக்கட்டுவ இரண்டு கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகையான ரூபா 254,054 தொகை 11 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிரதம செயலாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 29,066,067 தொகையான முத்திரைக் கட்டணங்களிலிருந்து ரூபா 10,479,783 தொகை 5 ஆண்டுகளில் கோரப்படாததன் காரணமாக அறவிட முடியாத நிலைமைக்குட்பட்டிருந்தன. மேலும் 2015,2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக முத்திரைக் கட்டணங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிரதம செயலாளரிடமிருந்து பெற வேண்டிய ரூபா 7,481,057 ஆன நீதிமன்றத் தண்டப்பணங்களிலிருந்து ரூபா 2,472,434 தொகை 5 ஆண்டுகளில் கோரப்படாததன் காரணமாக அறவிட முடியாத நிலைமைக்குட்பட்டிருந்தன.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 08 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினாந் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 சுகாதார துறை வேலைத்திட்டங்கள், 06 நீர்ச் சேவையின் வேலைத்திட்டங்கள், 03 சமூக அபிவிருத்தி பிரிவின் வேலைத்திட்டங்கள், மற்றும் 02 சுற்றாடல் பிரிவின் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 03 வேலைத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

சபை தினந்தோறும் சுமார் 4 டொன் கழிவினை சேகரிப்பதுடன் அக்கழிவினை முறையாக அகற்றுவதற்கான நிலையான ஒரு வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது. தினந்தோறும் சேகரிக்கப்படும் கழிவானது தனியார் இடமொன்றில் முறையற்ற விதத்தில் வெளியேற்றப்பட்டு வந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருந்த போதிலும் அதன் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

உள்ளூராட்சி மன்ற கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வறிய குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா. 149,100 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 24 கூரைத் தகடுகள் பொருத்தமான நலனாலிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் அத்தகடுகளில் ஒரு பகுதியைப் பயன்படுத்தி ஊழியர்களுக்கான வாகன தரிப்பிடமொன்று அமைக்கப்பட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

04 வருமான பரிசோதகர் பதவிகள் வீதித் தொழிலாளர்களால் மேவுகை செய்யப்பட்டிருந்ததுடன் சேவையில் ஈடுபட்டிருந்த மூன்று நூலக பொறுப்பாளர்கள் மற்றும் 08 சாரதிகளுக்கு அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) ஊழியர் கடன்**

இடமாற்றம் பெற்றுச்சென்ற 39 ஊழியர்களிடமிருந்து ரூபா 185,875 ஆன கடன் மீதிகள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்து வருவதுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட 5 செலவின விடயங்களின் நிதிஏற்பாடு 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தன. 29 செலவின விடயங்களின் சேமிப்பு 18 சதவீதம் முதல் 97 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினை எடுத்திருந்ததுடன் அதன் மொத்தம் ரூபா 3,162,135 ஆக இருந்தது. அவ்வாறு 10 செலவின விடயங்களில் நிதிஏற்பாட்டை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

## 4.3 பதிலளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகள்

2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த கணக்காய்வு விசாரணையொன்றுக்கு 2018 செப்தம்பர் 28 ஆந் திகதிக்கு முன்னர் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | காணி மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் கணிப்பீடு செய்யப்படாமை |
| (ஆ) | கடன்பட்டோர் | கடன்பட்டோர் தெதாடர்பான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை மற்றும் நீண்டகாலமாக நிலுவையான காணப்படும் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | ஊழியர் கடன் | இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களின் கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஈ) | வருமான நிர்வாகம் | நிலுவை வீதவரி, வாடகை, கடை வாடகை, முத்திரைக் கட்டணங்கள், நீதிமன்ற தண்டப்பணம் போன்ற வருமானங்களை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |